விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் வட்டம், கும்பகோணம் தொகுதியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் ஆகம விதி மற்றும் பழக்கவழக்கத்தின்படி பூஜைகள் செய்யப்பட்டு நடை சாத்தப்பட்டும், பின்பு பிற்பகல் திருக்கோயில்கள் திறக்கப்பட்டும் வருகின்றன. இந்நிலையில், அனைத்து திருக்கோயில்களும் நண்பகல் 1–00 மணி வரை மற்றும் பிற்பகல் 3–00 மணி முதல் திறக்க ஆகம விதி மற்றும் பழக்கவழக்கப்படி வழிவகை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான பிரச்சினைகள் குறித்து தங்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வர விரும்புகிறேன். முதலில் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இதெல்லாம், எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாததல்ல, விமர்சனமல்ல, அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. முறையாக

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2020 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, முறையாக (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். என்னுடைய பரிசீலனையில் இருக்கிற விஷயத்தை அவையில் விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதையெல்லாம் நீங்கள் அவையில் விவாதிக்க முடியாது. நீங்கள் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். நீங்கள் அதைப்பற்றி பேசவே முடியாது. என்னுடைய ஆய்வில் இருக்கிற ஒரு விஷயத்தை (குறுக்கீடுகள்) நீங்கள் கோரிக்கையைக்கூட அவையிலே வந்து (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அது எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) அது முறையாக, எப்போது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. நான் விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

நீங்கள் உட்காருங்கள். அதையெல்லாம் நீங்கள் விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) என்னுடைய பரிசீலனையில் இருக்கிற ஒரு விஷயத்தை நீங்கள் உறுதியாக விவாதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேண்டாம், வேண்டாம். நீங்கள் வேறு விஷயம் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: *நீங்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *நீங்கள் எப்போது உரிய நடவடிக்கை எடுப்பீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது *என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: *உங்கள் ஆய்வில் இருக்கிறது. அதில் நாங்கள் குறுக்கிடவில்லை. உங்கள் ஆய்வில் இருக்கும்போது, . . .*

திரு. மு.க. ஸ்டாலின்: *விரைவான நடவடிக்கையை எடுங்கள் என்று சொல்கிறோம்.*

திரு. துரைமுருகன்: *இப்போது எடுப்பீர்களா, பிறகு எடுப்பீர்களா?* (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *விரைவில் எடுங்கள் என்று சொல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய ஆய்வில் உள்ளது. உட்காருங்கள்.* (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *விரைவில் ஒரு நல்ல முடிவு,* Speaker Sir, Speaker Sir. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. அதையெல்லாம் நீங்கள் கேட்க முடியாது.* (குறுக்கீடு) *நீங்கள் எனக்கு இப்படித்தான் என்று சொல்லக் கூடாது. என்னுடைய ஆய்வில் உள்ளது. என்னுடைய ஆய்வில் உள்ளது.*

திரு. மு.க. ஸ்டாலின்: *நல்ல முடிவு எடுங்கள் என்று சொல்கிறோம், அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *சரி.* Speaker Sir, *அடுத்ததைச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் என்னுடைய ஆய்வில் இருக்கிற எந்த விஷயத்தையும் இந்த அவையிலே எழுப்பக் கூடாது என்பதுதான் சரியானது. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் இதுகுறித்துப் பேசியதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.* (குறுக்கீடுகள்)

(ஆ) தமிழகத்தில் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெறாது என அறிவிக்க வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டுமென்ற ஒரு தனி நபர் தீர்மானத்தை ஏற்கெனவே*